<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>

<u>அசல் வழக்கு எண்.175/2021</u>

2023 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 01ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.ஆர்.ஜனனி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சு.விவேக் | தந்தை/கணவர் பெயர் | : |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 01.06.2023

**P.W. : 1**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் டிப்ளோமோ டெக்கானிக்கல் என்ஜினியரிங் படித்துள்ளேன். நான் விஜய் டிவியில் Artist Assistant ஆக வேலை பார்த்து வருகிறேன். நான் என்னுடைய படிப்பை 2015ல் முடித்தேன். நான் முதன் முதலில் 2016ல் வேலைக்கு சென்றேன். எனக்கு ஆரம்பத்தில் ரூபாய்.15,000/– சம்பளம் பெற்றேன். வேறு எந்த வருமானமும் கிடையாது. இந்த வழக்கில் சொல்லப்பட்ட கடல் கண்ணன், சுப்பிரமணியன், பிரபு ஆகியோர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கடல் கண்ணன் என்பவர் எனக்கு தாய்மாமா ஆவார். சுப்பிரமணி என்னுடைய தந்தை ஆவார். பிரபு என்பவர் எனது தாய்மாமன் கடல் கண்ணனின் நண்பர் ஆவார். பிரதிவாதி என் மாமா கடல் கண்ணனின் நண்பர். எனக்கு பிரதிவாதியை சுமார் 10 வருடங்களாக தெரியும். பிரதிவாதி பேக்கரி தொழில் செய்து வருகிறார். மேற்படி பிரதிவாதி

செய்யும் பேக்கரி தொழிலுக்கு என் மாமா கடல் கண்ணன் ஆட்டோவில் சரக்கு ஏற்றி செல்வார் என்றால் இல்லை. என் தாய்மாமன் கடல் கண்ணன் ஆட்டோ டிரைவர் தான். மார்க்கெட்டில் காய்கறி ஏற்றி செல்வார். நான் என் வாக்குமூலத்தில் பிரதிவாதிக்கு ஆரம்பத்திலேயே பல்வேறு நபர்களிடம் கடன் உள்ளது என்று சொல்லியுள்ளது அந்த கடன் சுமார் 50 லட்சம் இருக்குமா என்றால் தெரியாது. எவ்வளவு கடன் தான் இருக்கும் என்று எனக்கு தெரியாது. நான் குறிப்பிட்ட பல்வேறு நபர்களிடம் கடன் பெற்றுள்ளதாக கூறும் நபர்களை பற்றி நான் எதுவும் கூறவில்லை. என்னிடம் பிரதிவாதி கடந்த 16.05.2019 ம் தேதியன்று 5 லட்சம் மற்றும் ரூபாய் 1 1/2 லட்சம் காசோலை மூலமாக பெற்றார். நான் அவருக்கு கைமாற்றாக கொடுத்தேன். எந்த ஆவணமும் அவரிடம் இருந்து வாங்கவில்லை. நான் பொதுவாக ஒருவருக்கு கடன் கொடுத்தால் காசோலை மூலமாக கடன் கொடுப்பேன் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு நான் மேற்கூறிய நபர்களான கடல் கண்ணன், சுப்பிரமணி, பிரபு ஆகியோர்களிடம் எந்தவொரு கொடுக்கல் வாங்கலும் கிடையாது என்றால் சரிதான். பிரதிவாதியிடம் நான் ஆவணமாக எழுதிய வாங்கியது தான் இந்த வா.சா.ஆ.2 கிரைய ஆவணம் என்றால் சரிதான். இதை தவிர வேறு எந்த ஆவணமும் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். நான் வருமான வரி 2015 ல் இருந்து செலுத்தி வருகிறேன். அந்த வருமான வரி கணக்கினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் கேட்டால் கொண்டு வந்து தாக்கல் செய்ய தயராக உள்ளேன். இந்த வழக்கில் நான் பிரதிவாதிக்கு பணமாக கொடுத்ததற்கு ஆதாரமாக காட்டும் ஆவணம் என்னுடைய வங்கி கணக்கு ஸ்டேட்மெண்ட் அது வா.சா.ஆ.1 என்றால் சரிதான். இதை தவிர வேறு எந்த ஆவணமும் நான் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 பதில் அறிவிப்பை நான், பிரபு மற்றும் கடல் கண்ணன் ஆகியோர்கள் வாங்கி படித்தோம் என்றால் சரிதான். நான் பிரபு, கடல் கண்ணனும் எந்தவிதமான மறுப்பு அறிவிப்போ அனுப்பவில்லை என்றால் 2021ல் நாங்கள் என் பெயரில் ஒரு மறுப்பு அறிவிப்பு அனுப்பினோம். அந்த மறுப்பு அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. ஆனால் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயராக உள்ளேன்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக கால அவகாசம் வழங்கப்பட்டது).**